மூலம்: ஸ்ரீ ஆதிசங்கரர் (சமஸ்க்ருதம்)
தமிழாக்கம்: ஸ்ரீதேவிபிரசாத்
********************
"நரசிம்மம்" என்பதே நிஜமாகும் ! - நம்
ஜீவன் என்பதே நிழலாகும் !
நிஜத்தின் பிம்பமே நிழலாகும் ! - நீ
நிஜத்திற்கு செய்வாய் அலங்காரம் !

உலகியல் என்னும் பாலைவனம் - அதில்
தச்சர் தேனீபோல் உழலும் மனம் !
லட்சுமி நரசிம்மர் பூம்பாதம் - அங்குத்
தேனைப் பருகினால் ஆனந்தம் !
போற்றிப் பாடிடு ! போற்றிப் பாடிடு ! - ஸ்ரீ
லட்சுமி நரசிம்மர் பூம்பாதம் !
அமுதத் தேனையே என்றும் சொறிந்திடும்
அதுவே அற்புத மகரந்தம் !

௨)

முத்துச் சிப்பியும் வெள்ளி நிறம் - அதில்
செய்ய முடியுமோ ஆபரணம்?
இத்தரை வாழ்க்கை பெருந்துன்பம் - அதில்
எப்படிக் கிடைக்கும் பேரின்பம்?
உலகியல் என்னும் பாலைவனம் - அதில்
தச்சர் தேனீபோல் உழலும் மனம் !
லட்சுமி நரசிம்மர் பூம்பாதம் - அங்குத்
தேனைப் பருகினால் ஆனந்தம் !
போற்றிப் பாடிடு ! போற்றிப் பாடிடு ! - ஸ்ரீ
லட்சுமி நரசிம்மர் பூம்பாதம் !
அமுதத் தேனையே என்றும் சொறிந்திடும்
அதுவே அற்புத மகரந்தம் !

PSDPrasad Music

3)

பட்டு பருத்தி மரம் வடிவம் - அது
குளத்துத் தாமரை போல்தோன்றும் !
மரத்தில் கிடைக்குமோ பூவாசம்? - அதில்
தேனும் சுரந்திடுமோ எப்போதும்?
உலகியல் என்னும் பாலைவனம் - அதில்
தச்சர் தேனீபோல் உழலும் மனம் !
லட்சுமி நரசிம்மர் பூம்பாதம் - அங்குத்
தேனைப் பருகினால் ஆனந்தம் !
போற்றிப் பாடிடு ! போற்றிப் பாடிடு ! - ஸ்ரீ
லட்சுமி நரசிம்மர் பூம்பாதம் !
அமுதத் தேனையே என்றும் சொறிந்திடும்
அதுவே அற்புத மகரந்தம் !

4)

மதுவும், மாலையும், சந்தனமும்
சுகம்எனத் தேடி அலையும்மனம் !
சுகம்போல் தோன்றி தொல்லை தரும் - அந்த
பிரியங்கு கொடியினைப் போலாகும் !
உலகியல் என்னும் பாலைவனம் - அதில்
தச்சர் தேனீபோல் உழலும் மனம் !
லட்சுமி நரசிம்மர் பூம்பாதம் - அங்குத்
தேனைப் பருகினால் ஆனந்தம் !
போற்றிப் பாடிடு ! போற்றிப் பாடிடு ! - ஸ்ரீ
லட்சுமி நரசிம்மர் பூம்பாதம் !
அமுதத் தேனையே என்றும் சொறிந்திடும்
அதுவே அற்புத மகரந்தம் !

5)

பேரானந்த நிலை வேண்டின் - நான்

PSDPrasad Music

சொல்லும் சேதியைக் கேட்டிடுவாய் !
கனவில் காண்பதெலாம் வெறும் பொய்யை ! - நீ
நினைவில் காண்பதும் பெரும்மாயை !
உலகியல் என்னும் பாலைவனம் - அதில்
தச்சர் தேனீபோல் உழலும் மனம் !
லட்சுமி நரசிம்மர் பூம்பாதம் - அங்குத்
தேனைப் பருகினால் ஆனந்தம் !
போற்றிப் பாடிடு ! போற்றிப் பாடிடு ! - ஸ்ரீ
லட்சுமி நரசிம்மர் பூம்பாதம் !
அமுதத் தேனையே என்றும் சொறிந்திடும்
அதுவே அற்புத மகரந்தம் !

PSDPrasad Music